


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [illegible]

06906

[illegible]

6906

அருவி வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title: Yuthathai Thinpom
Subject: Poems
©Authors: Pratheeba Thillainathan
Thirumavalavan
Sakkaravarthi
Edition: First: June 1999
Type Setting: Vijayasuganthan
Sabesan
Thirumavalavan
Cover: Karuna
Design: digi Graphics & Studios
Publishers: Aruvi Publications
75 Brimley Road
Scarborough, ON
M1M 3H7
(416) 264-6567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனிதம் உருவழிகையில்
மௌனத் திரையிறக்கி
நிஷ்டை கூடாமல்"
எதிர்ப்புக்குரல் எழுப்பியவர்களுக்கும்
எழுப்புபவர்களுக்கும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரதீபா தில்லைநாதன்**

இரைமீட்பு 11

**திருமாவளவன்**

முல்லைத்தீவு 18

நச்சுக்கொடி 19

யாரோடு நோவேன் 22

**சக்கரவர்த்தி**

எங்க மெனேய் போய் இரிக்காய் 26

கடவுள்கள் செய்வோம் 28

பாவம் புத்தா 29

சாஸ்வதம் 31

யுத்தத்தைத் தின்போம் 32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதத்தை எழுதிவைப்போம்

கடந்த இரண்டு தசாப்தங்களாக பொதுவாக கவிதை இலக்கியத்தில் ஈடுபாடும் ஆர்வமும் அதிகரித்து வந்துள்ளமையைக் காணலாம். இலக்கியங்கள் சமுதாயத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை. ஈழத்து கவிதைகள் இந்த விதியில் நின்றும் எங்ஙனம் பிரிந்து நிற்கமுடியும்?

எரிந்து கிடக்கும் வயல்களின் அவலங்களையும் சிதறிப்போன வாழ்க்கையின் சோகங்களையும் சொல்லி விம்முகின்ற குரல்களை நமது கவிதைகளில் காணமுடியும். மனதுக்கு மட்டுமல்ல பிடுங்கி எறியப்பட்ட நமது வாழ்க்கைக்கும் இதம் தடவும் புல்லாங்குழலின் இனிய ஓசையை கவிதைகளில் கேட்கமுடிகின்றது. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்று நம்பிக்கையின் வீச்சை மூங்கில்களில் தெறித்து வருகின்ற கவிதைகளில் பார்க்க முடிகின்றது. மலைகளையும் ஊடுருவி இந்த பிரபஞ்சத்தையே தகர்த்து விடுகின்ற வலிமையை அலைகளுக்கு மேலாக எழுகின்ற கவிதைகள் தந்து நிற்கின்றன. இவற்றோடு குழந்தைகளை, பறவைகளை, புற்களை, பூக்களைப் பாடி மனிதநேயத்தை உயர்த்தி நிலாவின் வெளிச்சத்தில் சொல்லத்துடிக்கும் அற்புதமான கவிதைகள் தாராளமாக வந்து கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தங்களை எவருமே முகம்காட்டி, முறுவல் இட்டு வரவேற்றதில்லை. ஈழத்தமிழர் மீதும் பலவந்தமாக திணிக்கப்பட்டதே இந்த யுத்தம். தமிழர்கள் மீது மட்டுமல்ல இலங்கையின் அனைத்து மக்களின் மீதும் பலவந்தமாக திணிக்கப்பட்டதே யுத்தம். வாழ்வதற்காக போராடியாக வேண்டும் என்ற கட்டாயத்தில் எரிந்து கொண்டிருந்த குடிசையின் தடிகளை பிடுங்கி உயர்ந்த யுத்தம். மனிதநேயங்களை தூக்கி உயரும் என நாம் நம்பியதில் தவறு ஏதும் இருக்கின்றதா? நமது ஆதங்கமான கேள்வி இது.

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் எவையுமே யுத்த மேகங்களை அடியோடு விரட்டியடிக்கும் அடிப்படைக் காரணத்திற்கான தீர்மானகரமான தீர்வை முன்வைக்கத் தயாராக இருக்கவில்லை என்பது கசப்பான உண்மை. இலங்கையின் வரலாறு அப்படியாகிவிட்டது என்று கூறலாம். சரிதான், ஆனால் ஈழத்தமிழர்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்காமல் யுத்தம் நின்றுவிடப்போவதில்லை. இந்நிலையில் இலங்கை மக்களின் உள்ளங்களில் யுத்தத்தை வெறுக்கும் மனோபாவமும் மனிதத்தை உயர்த்தி பிடிக்கும் இயல்பும் அதிகரித்து வருவதை காணமுடிகிறது. தமிழ் மக்களின் துயரங்களுக்கு வடிகால் அமைக்க இந்த மனிதக்குரல்களின் தேவை என்றைக்கும் இல்லாத அளவு இன்று அவசியமாய் உள்ளது. மனிதத்தை கடல் மீதும், வானத்தின் மீதும், புற்களின் மீதும், பூத்த மகரந்த மணிக-ளின் மீதும் எழுதிவைப்போம்.

இந்த தொகுப்பில் மூன்று கவிஞர்களின் கவிதைகள் இடம்பெறுகின்றன. திருமாவளவன், சக்கரவர்த்தி இருவரும் இக்கவிதைகளுக்கும் அப்பால் நிறையவே எழுதியுள்ளனர். நன்கு அறியப்பட்டவர்கள். பிரதீபா இளவயதில் எழுத ஆரம்பித்துள்ள கவிஞர். இவர்களோடு எனக்கு பரிச்சயம் உண்டு. ஈழத்தமிழர்களின் இறைமை தொடர்பாக தெளிவான நிலைப்பாடும் உறுதிப்பாடும் கொண்ட இவர்கள் மனிதநேயம் மறுக்கப்படுகின்ற போதெல்லாம் துடிதுடித்து எழுகின்ற மனிதர்கள். இவர்களின் துடிப்பை, வேதனையை, கோபத்தின் சுவாலையை இந்தக் கவிதைகளில் காணலாம். இவர்கள் தங்கள் இயல்பிலும், தனித்துவத்திலும், கவித்துவத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்டு நிற்பதை காணமுடிகின்றது. கவிஞர்களுக்கே இயல்பான அம்சம் இது.

கண்களையும் காதுகளையும்
திறந்தும் வைக்கத்தான் வேண்டும்.

புற்களின் மீது இட்ட பனிமுட்டைகளை பார்க்கவும்
காற்றில் நடனமாடி வரும் பறவைகளின் ஒலி கேட்கவும்
மட்டுமல்ல

மனிதர்களை பார்க்கக் கற்றுக் கொள்ளவும்
மனிதத்தின் குரல்களை கேட்டுப் பழகவும்-

கண்களையும் காதுகளையும்
திறந்தும் வைக்கத்தான் வேண்டும்.

அன்புடன் -
**செழியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருவியிலிருந்து...

ஈழத்து கவிஞர்கள் சிலரது பாடல்களை லேசர் இசைத்தட்டாக கொணர்வது தொடர்பான சிந்தனை எழுந்தது. அச் சிந்தனையின் தொடர்ச்சியாகப் புலம் பெயர்ந்து ரொறன்டோவில் வாழும் ஈழத்து கலைஞர்களின் ஆர்வத்தில் வெளிவந்ததே புலரும் வேளையில் லேசர் இசைத்தட்டு. இந்த இனிய முயற்சியால் உருவெடுத்ததே **அருவி வெளியீட்டகம்.**

சீரழிவுக் கலாச்சாரத்தில் இருந்து வேறுபட்டுத் தனித்து நிற்கும் ஈழத்து கலைஞர்களின் கலை இலக்கியப் படைப்புக்களை வெளிக்கொணரும் நோக்கத்தை மையமாக கொண்டு செயற்படும் அருவியின் மூன்றாவது வெளியீடு **யுத்தத்தை தின்போம்** கவிதைத் தொகுப்பு.

நாம் இந்த கவிதைத் தொகுப்பை வெளியிட எத்தனித்த போது எம்மை நோக்கி இரு கேள்விகள் எழுந்தன. இந்த கவிதைகள் மூலம் என்ன சொல்ல வருகின்றீர்கள்? இதன் இன்றைய அவசியம் என்ன?

வெறுமனே யுத்தத்தை நிராகரித்து விடுவதால் உரிமைகள் கிடைத்து விடுமா? அல்லது அடக்குமுறைதான் தீர்ந்து விடுமா? நிச்சயமாக இல்லைதான். ஆனால் மறுபக்கமாக உள்ளார்ந்த கேள்விகள் உள்ளன. யுத்தங்கள் மனித உரிமைகளை மறுக்கவில்லையா? யுத்தங்கள் மூலம் அடக்குமுறை புதிய பரிமாணங்களை எடுக்கவில்லையா? இவற்றில் நிச்சயமாக உண்மையுண்டு. இந்த இருபக்க நிலை தொடர்பாகவும் விவாதம் தொடர முடியும். இத்தகைய விவாதம் முடிவற்றதாய் தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாதிக்கம் எப்போதும் கொடுமையானது. மக்களுக்கு எப்பொழுதும் கோரமான முகத்தையே காட்டிக் கொண்டிருக்கும். அதனிடத்தில் மனிதத்தை தேடுவதில் எந்த நியாயமும் இல்லை. மேலாதிக்கத்தின் மீது வெறுப்பை உமிழுகின்றனர் இக்கவிஞர்கள். ஆனால் மேலாதிக்கத்தை எதிர்க்கப் புறப்பட்டவர்கள் மனிதத்தை மறக்கமுடியாது. மறுக்கமுடியாது. அப்படி ஏதும் நிகழ்ந்தால் அந்தப் போராட்டத்தின் சத்தியத்திலேயே கேள்வி எழுகின்றது.

இந்த தொகுப்பில் உள்ள மூன்று கவிஞர்களும் யுத்தத்தின் கொடுமையை வெறுக்கிறார்கள். தங்களின் அக உணர்வுகளின் வெளிப்பாட்டில் யுத்தம் செய்பவர்களை விமர்சிக்கிறார்கள். பொதுமைப்பட்ட நியாயமொன்றில் இருந்து இந்த வெளிப்பாடுகள் நூறு வீதம் சரியென்ற முடிவு இங்கு நியதியில்லை. ஆனால் எல்லா மக்களின் உள்ளுணர்வுகளும் கூறும் உண்மை ஒன்று உண்டு. அது இலங்கையில் வாழும் மக்களின் நியாயமான தேவையும் கூட.

கந்தகப் புகையை நெஞ்சுக்குள் ஊறவைத்து
எலும்புக்கூடுகளாக உலவும் எங்களுக்கு
யுத்தமற்ற ஒரு புதியகாற்றை
சுவாசிக்கின்ற நாள் வேண்டும்.
நிமிர்ந்து உட்கார்ந்து நெடுமூச்செறிவதற்கு
யுத்தமற்ற வெளியொன்று வேண்டும்.

கவிஞர்களின் கருத்துகளோடு பலர் முரண்படலாம். ஆனால் மக்களின் இந்த நியாயமான உணர்வு நிலையை நாம் மறுதலிக்க முடியாது.

**அஆகி வெளியீட்டகம்**
ஜுன் 1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரதீபா தில்லைநாதன்



ரிதீபா தில்லைநாதன் 15 வயதே நிரம்பப்பெற்ற இளைய, புதிய கவிஞர். வேம்பர்ன் கல்லூரியின் மாணவி. இவரது கவிதையொன்று ஏற்கனவே "உயிர்நிழல்" சஞ்சிகையில் வெளிவந்துள்ளது. 11 வயதிலிருந்தே கவிதைகள் எழுதிவருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரைமீட்பு

இருகை இணைத்து
கட்டிய மண்ணில்
ஊரில் வீடு.

பொழுது சாய்ந்தாலும்
மனிதர்கள் மறையா
தோழர் சகித
அப்பா சிரிப்பு.

பட அறை தாங்கும் துவக்குகள்
வாய் பிளந்து
நோக்கும் பார்வைகள் அதிசய பொருளின் ஸ்பரிசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடித்தொடும் கைகளின்
சாதித்த மனசு
போராட்டத்திற்காக
ஆயுதம் தூக்கும்
மாமாக்களாம்.

அம்மா சொன்னாள்.

வெளிச்சத்தை கண்ணுக்கடித்து
பயப்பட்டலற மேலே
தூக்கி கண்ணடிக்கும்
தென்னைமர மூலைகளில்
வீட்டுக் கொல்லைகளில்
"கோலிங் அப்பா... கோலிங் அப்பா
ஓவர்.. ஓவர்" என
அடிக்கடி பெட்டியோடு பேசும்
மாமா
இன்றில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## [illegible]

படிக்கப்போன பல்கேரிய அத்தையின்
பரிசுக் கிட்டாரை மீட்டக்கற்பிக்கும்
பிரசுரம் கொண்டுபோய்
அந்நியன் பிடித்து வாராது போன
பிறிதொருவர்.

கிட்டாரை மீட்ட
விரல்கள் மீளுமா?

அவர்கள் வைத்த கண்ணிவெடிக்காய்
அமைதிகாப்போர் சுட்டவர்களுள்
அப்பாவும் ஒண்டென்று
கதறியழும் நண்பியின்
தந்தையின் சைக்கிள் பின்சீட்டில்
பலநாள் பயணித்தது
பலமாய்த் தாக்க

தலைக்கு துணியால் கொண்டைபோட்ட
ஆண்கள் தலைகளைக் காண்கையில்
பயமாய்க் கோபமாய்
மாறிடும் மனதில்
சொர்க்கமேயென்ற பூமி
கொதித்து கனன்றது.

தாத்தாவின் நண்பர்
காக்கா
காரணப்பெயரல்ல
நண்பர் வெள்ளை.

நீண்ட ஆராய்ச்சியின் பின்
காக்கா அண்ணா
கூப்பிடலில்
திருப்பிச்சிரிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கா என்பதே
அண்ணா என்றறிகையில்
எம்மகராதி
ஓர் சொல் சேர்த்துக் கொள்ளும்

பிறிதொரு நாளில்
அம்மா
பாவம் சனங்கள்
விளக்கோடும் பாயோடும்
மழை வேறு

வெளியேற்றப்பட்ட சனங்களை
வவுனியா வழிகளில்
கண்ட கவலைகள்
கவலைப்படாமல்
கெந்தித்தட்டுவோம்.

இருகை இணைத்து
கட்டிய மண்ணில்
ஊரில் வீடு.

கனடா வாழ்க்கை
கடத்தலின் பின்
ஈழம் நோக்கிய
இன்னொரு பயணத்தில்
வானம் நோக்கும்
வாழ்தல் பயத்தில்.

அம்மம்மா வீட்டு
தேசி மரமும்
கருவேப்பிலை மரமும்
பூத்து காய்த்து
செழித்து இருக்கையில்
விமானச் சத்தமோ பீதி தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டில் வாங்கில்
படுத்துக்கிடக்கும்
ஆத்ம சுகத்திற்கே
பீதிதான் விலை.

தாத்தாவின் வாயோ
புளியமரக் காணியில்
முழங்கால் வளைத்து
குந்தி
புல்லுப் பிடுங்கும்
முனைதலின் ஊடே வளர்த்த
ரெண்டு தென்னம் பிள்ளைகள்
"அவங்கள்" சுட்டுப்பழகி பட்டதனை
அவங்களுக்கென்ன தெரியும்
என ஆறும்.

எனது காற்றோ
அப்பா கேட்கச்சொன்னதை
வேண்டா வெறுப்பாய்
வெள்ளைக்காரன் வரமுன்னம்
நெடுந்தீவில் நெசவு இயந்திரம் இருந்ததாமே
கேள்வி வீசும்
பதில்மேல் சுரணையற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா (சு)வாசத்தில்
நாவூற மின்னிய
கிணற்றுத் தண்ணீர்
கைப்பாய்க் கைத்தது.
குளம்
கலிங்குப் பாய்ந்தது.

மறுநாள் மாலை
சித்தி
இயக்கத்துக்கு ஓடீற்றாள்.

தாத்தா
நெடுந்தீவு மண்ணும்
வன்னி வாழ்தலும் பற்றி பேசி
விடைபெறும் போது
கலங்கும் முதுமையை
முக்காடிட்டு மறைத்து,
"சின்ன காக்காவை
கொழும்பில கண்டனியோ?"
கேள்வியில் வெளிறும்
சொர்க்கமே எனது பூமி.

கிணத்துத்தண்ணி
கைக்கும்.
கலிங்குப் பாயும்.


சொர்க்கமே எனது பூமி?

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாவளவன்



புகலிடச் சூழலில் முக்கியமானதொரு கவிஞராக அண்மைக் காலங்களில் முகிழ்த்திருப்பவர் திருமாவளவன். இவருடைய ஏராளமான கவிதைகள் புகலிட சஞ்சிகைகளிலும், சரிநிகர் (இலங்கை) பத்திரிகையிலும் வெளிவந்துள்ளன. மூகரம் பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு

சதைக் குவியலாய்
சிதைந்து கிடக்கிறது
சூரியன்

வான வெளியெங்கும்
சிதறிக் கிடக்கிறது
இரத்தம்

இந்த அதிகாலைப் பொழுதில்
குண்டுப் பொதியுடன்
சூரியன் மீதில்
பாய்ந்த
பாலன் யார்?

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நச்சுக்கொடி**

அழு பெண்ணே அழு
உன் ஒப்பாரிப்பாடல்
ஏழு கடல்தாண்டி
எழுகிறது
என்செவியில்

ஊரடங்கு அமுலிருந்த
நடுஇரவில்
உன் வயிற்றில்
வலியெழுந்த போதில்
வீழ்ந்த அலறல்
இன்றும் அதிர்கிறது
என்னில்.

அன்று
கோடிப் புறத்து
எலுமிச்சை அடியில்
தாட்டுவிட்ட நச்சுக்கொடி
மண்ணில் கலந்து மடிந்திருக்க
வாய்ப்பில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏணையிலே கிடத்தி
நீ படித்த தாலாட்டும்
ஏணைகட்டுதற்கு
வீட்டு கோப்புசத்து விட்டத்தில்
கொழுவி விட்ட
தேடாவடக் கயிறும்
நினைவில் முட்டுதடி
இன்றும்.

கண் மூடிவிழிக்கு முன்னெழுந்த
கணப் பொழுதுள்
களத்துள் பாய்ந்து
வெடித்து சிதறி
காற்றில் கலந்து விட்டான்
உன் பாலன்.

கட்டிப்புரண்டு
கதறி அழுகின்றாய்
என்ன செய்வாய்?

வெடிவால் முளைக்கு முன்னர்
அழைத்து
மூளை நீக்கி
கபாலத்தை கோதாக்கி
துடைத்து
சலவையிட்டு
வெடிமருந்தை நிரப்பி
ஏவி விடும் கலையும்
மாவீரம் செய்கின்ற
வல்லமையும்
வாய்த்திருக்கு
அவர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழுகையின்

அழு பெண்ணே!
அழு

மாவீரமென்று
சோகத்தை புதைத்து
வெதும்பத் தெரியாத
பேதை நீ
அழு

உன்
பிள்ளைக்காய்
முற்றத்தில் தவழ்கின்ற
குழந்தைக்காய்
ஒழுங்கையில் நடக்கும்
கர்ப்பிணி வயிற்று சிசுவுக்காய்
ஆயுதக் குதங்களாய் நிரவி வழியும்
ஆயிரக்கணக்கான சிறுவருக்காய்
அழு

உன் ஒப்பாரிப் பாடல்
எட்டுத்திக்கும்
ஒலிக்கட்டும்

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாரோடு நோவேன்?

எப்படி இசைப்பேன்
என்
தேசத்தின் பாடலை?
அந்த மண்ணின் ஓவியத்தை
எங்ஙனம் வரைவேன்?

நச்சுக் கொடியென
நான்கு புறமும் கிளை பரப்பி
படர்ந்து கிடக்கும்
படைமுகாம்களை
எவ் வண்ணத்தால் தீட்டுவேன்?

காணும் இடமெல்லாம்
நீக்கமற
நிறைந்து கிடக்கிறது
முட்கம்பி வேலிகள்
மண்மூடை அடுக்கிய காவலரண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## [illegible]

நடுவே
நிறுத்திவைக்கப்பட்ட துப்பாக்கிகள்
அதில் கொழுவி விடப்பட்ட
மீசை கறுக்காத
இராணுவச் சிப்பாய்கள்
அவர்கள் முகங்களில்
அப்பியிருக்கும்
தூக்கக் கலக்கம்
கொலைவெறி
மரணபயம்
இவற்றையெல்லாம்
எந்த வண்ணத்தால் பூசுவேன்?

பிடுங்கியெறியப்பட்ட
படைமுகாம்களின்
அடியிலெல்லாம் புதைகுழிகள்
தோண்ட தோண்ட
தொடரும்
எலும்புக்கூடுகள்

எலும்புக்கூடுகளின்
நிணத்தோடும் தசையோடும்
அழிந்துபோன நிஜங்கள்
நிஜங்களில் இருந்த
வாழ்வு பற்றிய கனவு.

ஒருத்தி
பள்ளிக்கு போனாள்
இன்னொருத்தி
பார்த்துவரப் போனாள்
வேறொருவன்
சந்தைக்குப் போனான்
போனவர் போனவர்தான்
இவர்களின் உருக்களை
எங்ஙனம் வரைவேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளரச இலைகளுக்கு
இரத்த வண்ணம் தீட்டி
அதன் கீழ்
புத்தனுக்கு எலும்புக்கூடுகளால்
பீடம் அமைக்கலாம்
அவன்
முகத்தின் சாந்தத்தை
அழித்து
அகோரத்தை எழுதலாம்
என் தேசத்து புத்தனுக்கு
அதுவே அழகு

புத்த பிச்சுகளின்
மழித்த மண்டை மேல்
தலைக்கவசம் சூட்டி
கைகளில்
கொலைக் கருவிகளை
வரையலாம்

முடிவாய்
என் மண்ணை சபித்து
யுத்தத்தை துப்பிய
முனிவன் யார்?
அவனை
எப்படி சித்திரிப்பது?

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்க மெனேய் போய் இரிக்காய்**

தொரந்துட்ட கோழியும்
கூட்டுக்க போயித்து
மேயப் போன ஆடுமாடெல்லாம் கூட
பட்டிக்க வந்தித்தே. . .

சுட்ட கருவாட்டோட
தண்ணிச் சோத்த திண்டுத்து
தெறியறுத்த கழிசான
அறுனாக் கொடியால இறுக்கித்து
பள்ளிக்கு போன எண்ட புள்ளதானே
ஊட்டுக்கு இன்னும் வரல்லேயப்பா. . .

போடியார்ர வயலுக்க
உப்பட்டி கட்ட போன புருசன்
வந்து கேட்டா
புள்ளக்கி நானு எங்கடாப்பா போவன்
தட்டுவாணி எவளையும் இழுத்தித்தோட
எண்ட புள்ளக்கின்னும் வயதும் இல்லேடாப்பா.

06906



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்கிலிச்சி

கொரக்கன் மா கூழும்
எரும மாட்டுத் தயிருமா
குடுத்து குடுத்து வளத்த ஒடம்ப
எந்தப் பாதகன் இப்ப
பொரட்டி எடுக்கானோ?

ஆடு வேணும்மெண்டா
கொண்டு போங்கோ
கோழி வேணுமெண்டாலும்
புடிச்சித்து போங்கோ
கைய கால ஒடச்சிப் போட்டெண்டான
எண்ட புள்ளய என்னட்ட
தந்திருங்க சாமிமாரே. . .

தொவக்கு தூக்கின தொரமாரே
தொவக்கு வெச்சிரிக்கற ஐயாமாரே
குஞ்சி குரல் ஊட்ட இரிந்தா
அதுகளுக்கும் புண்ணியம் சேரும்
ஆரு கொண்டு போயிருந்தாலும்
உசிரோட எண்ட புள்ளய
தந்திருங்க சாமிமாரே

உசிரும் மசிரும் ஒங்களுக்கு ஒண்டுதான்
எண்ட புள்ளதாண்டா பாதகனுகளே
எனக்கு உசிரு.

●●●

## கடவுள்கள் செய்வோம்

எல்லோரும் கடவுள் ஆவோம்
முளைத்த தலைகளில் எல்லாம்
கொடூரம் கொள்வோம்
கிளைவிடும் கைகளில் எல்லாம்
ஆயுதம் அணிவோம்

வணங்காதவரை அசுரர் என்போம்
பின் பிணமாக்கி அவர் மேல் நிற்போம்
குடலுருவி மாலை அணிவோம்
நீளக் கோரப்பல் காட்டி
அவதாரம் என்போம்

அசுரர் மலியும் பொழுதெல்லாம்
பாலமுருகன்கள் செய்வோம்
ஆயுதம் அணிவித்து
அழகுறச் செய்வோம் - பின்னழித்து
மண் வெல்லச் செய்வோம்

இரத்தம் நிறைந்த குளங்களில் தாமரை பூக்கும்
அது கொய்து சுய பூசை செய்வோம்
சுய தவம் செய்வோம்
அழியா சுய வரம் பெறுவோம் - அப்புறம்
அனைவரையும் சாகச் செய்வோம்

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சச்சிதானந்தன்

### பாவம் புத்தா

நிஷ்டை கலைந்தது
கண்திறந்தார் புத்தா

விலங்குகளும் துவக்குகளும்
நேப்பாம் குண்டுகளுமாய்
காய்த்திருந்தது போதிமரம்

மரணமும் வறுமையும்
பௌத்தம் திணிக்க
மூப்பில் மூழ்கி
இடறிக் கிடந்தது தமிழ்

வெண்ணிற தூபியின் வெண்கலக் கூம்பி
சதா ரத்தம் கொட்டியது
தமிழோடு சேர்த்து
சமயங்களில்
சகோதரயாவின் ரத்தமும் வடிந்தது.

விகாரை விகாரமானது
உயிர் வதை கட்டளைகள்
வெண்ணிறக் கட்டடத்திற்குள்ளும்
கருக்கட்டிக் கொள்கின்றன.
பௌத்தனின் விகாரையும்
கொலைகளின் கருவறையானது

நிஷ்டை கலைந்தது
கண்திறந்தார் புத்தா
நிர்வாணத் தமிழிச்சி
காலடியில் கிடக்க
நிஷ்டை கலைந்தது
கண்திறந்தார் புத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலன் உறைக்க
நிர்வாண புத்தா
வெட்கத்தில் பொத்திக் கொண்டார்
பின் ஆடையணிந்தார்.
என்ன இது
என் துறவுக்கு விரோதமாய்
நிறுத்துங்கள் இம்சையை

சிங்களம் அல்லாத பாசை
புத்தாவினுடையது
புரிந்து கொள்ள முடியாததால்
நிஷ்டை கலைந்த புத்தா
சர்ச்சைக்குட்பட
விசாரணை ஆரம்பமானது

புத்தாவுக்கு சிங்களம் தெரியாது
புத்தா உயிர்வதைக்கு எதிரானவர்
மற்றும்
புத்தா வந்தேறுகுடி

காலப்போக்கில்
தென்திசை மைதானங்களில்
எங்கேனும் மலக்குழிக்கிடங்கொன்றில்
கண்டுபிடிக்கப்படலாம்
புத்தாவின் எலும்புக்கூடும்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாஸ்வதம்

அன்னியப்பட்டதென் தேசம்.
நிற்க!

சமாதானத்துக்கான பாடலிலும் பார்க்க,
யுத்த எதிர்ப்புக் கவிதை
மிகவும் நன்றென்று அறிக!

அகதி வாழ்வில்
அருவெருப்பொன்றும் அவ்வளவாயிருந்ததில்லை
வாயுள்சலங்கழித்த
சமாதானச் சிப்பாயின் மூத்திரப்போக்கியை
கடித்தெடுக்கா இயலாமையிலும் பார்க்க. . . . .

என்தேசத்துக்காரனாகிய நான்
பிறதேசத்துக்காரனான பிற்பாடு
- அஃதே -
ஆணுறைப்பையுள் தேங்கிடுமிந்திரியம்
வீரியமிழந்து இறந்துபோக
ஒன்று மட்டும் சொல்லமுடிகிறது
இராவணனும் அவன் வில்லனும்
இறந்துவிட்ட பிற்பாடும்
எரியும் லங்காபுரியில்
எப்போதோ எவளோ
பாதிமுலை பிய்த்து எறிந்திருத்தல்கூடும்

என்னைப்படுத்தியது போன்று இன்னும்
அப்புறப்படுத்த வேண்டியவைகளை
அடையாளங்காண்க,
என் முன்னாள் தேசமே!

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் கனடாவிற்கு வந்து சென்ற தென்னிந்திய சினிமாப் பாடலாசிரியர் வைரமுத்து தலைமை தாங்கிய கவியரங்கம் 01.05.99 இல் நடைபெற்றது. அக்கவியரங்கில் சக்கரவர்த்தி பாடிய கவிதை இது.

ஈழ யுத்தத்தை விற்றுப் பிழைப்பவர்களையும், மற்றவர்கள் குருதியில் பணம் சம்பாதிப்பவர்களையும் காயப்படுத்திய இக்கவிதை கவியரங்கில் ஒரு எதிர்ப்புக் குரலாக அமைந்து பலத்த வரவேற்பைப் பெற்றது. அடுத்த நாள் நடைபெற இருந்த கவியரங்கு இரத்துச் செய்யப்பட்டது!

சிறுகதைகளும் எழுதிவரும் சக்கரவர்த்தியின் வெளியான கவிதைத் தொகுதி: யுத்த சன்னியாசம் (1994)

## யுத்தத்தைத் தின்போம்

தண்ணீர் தேசத்தை மட்டும் கவிபாடிவிட்டு
எங்கள் கண்ணீர் தேசத்தை கை கழுவி விட்ட
வைரமுத்து ஐயா அவர்களுக்கும்
மூத்த கவிஞர்களுக்கும்
சகோதரிக்கும் உங்களுக்கும்
வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலுவைச் சிறகு

அடையாளம் தெரியாது அகழ்ந்து
எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் ஆத்மாவுக்கு
என் அஞ்சலியை செலுத்திக் கொண்டு
ஆரம்பிக்கிறேன் என் கவிதையை.

சின்ன சின்ன ஆசை
சந்தத்திற்குள் அடங்குவதில்லை
எங்கள் வாழ்க்கை.

சிலுவைகள் தான் எங்களுக்கு
சிறகுகள் தந்தன.
வேரறுந்த பனைமரங்கள்
துருவத்து உறைபனி முற்றத்தில்
வலி முனகலுடன் துளிர் விட்டன.

இலை உதிர்ந்து உடல் விறைத்த
மேப்பிள் மரத்தில்
ஒட்டு மாங்கன்றுகள்
கிளைவிட்டன.

சிலுவைகள் தான் எங்களுக்கு
சிறகுகள் தந்தன.

சிலுவைகள் கிளை உடைய
சிறகுகள் இப்போது
சுமையாகிப் போகின.
நான் என் தேசம் மீளல் வேண்டும்.
தேசம் மீதான பசலை நோய்
தேகத்தில் படர
தேசம் பற்றிய கனவு
நமக்கிப்போது பிணியாகிப் போனது.

துப்பாக்கிகள் எப்போது துருப்பிடிப்பது,
நாம் எப்போது
நம் தேசம் மீள்வது?
நான்கு புறமும் அலைகள்
நடப்பதென்னவோ கொலைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லின் நுனியில் ரத்தம்
மொட்டவிழ்த்த மல்லிகை இதழில் ரத்தம்
தாமரை பூக்கும் குளங்களில் எல்லாம் ரத்தம்
குழந்தைகளின் தொட்டில்களில் எல்லாம் ரத்தம்
பாடும் மீன்களின் வாய்களில் எல்லாம்
மனிதத் தசைத் துண்டம்.

ராவணன் இறந்து விட்டான்
அவன் வில்லனும் இறந்துவிட்டான்
இன்னமும் ஏன் எரிகிறது
இலங்கா புரி?

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
அன்னை இட்ட தீ அடி வயிற்றிலே
தனு அன்னை(?) இட்ட தீ ஸ்ரீபெரும் புதூரிலே.
எந்தப் பாதகி இட்ட தீ எங்கள் மாங்கொட்டைத் தீவிலே.

அன்றோர் காலத்தில்
தென் பாரதக் கரையோரத்தில் நின்று
நாயனார் ஒருவர் பாடினார்
ஈழத் திசை பார்த்து,
"செத்தார் எலும்பு அணிவான் திருக் கேதீச்சரத்தானே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## [illegible]

மைதானங்கள் எல்லாம்
மையம் தாக்கும் மையமாகினவே
தோண்டத் தோண்ட
கறள் படிந்த கூடுகள்!
உ யிரற்ற மனிதக் கூடுகள்!
எங்கள் நிலமென்ன
எழும்புக் கூடுகள் விளைவிக்கும்
தொழிற்சாலையா?

எந்தக் கேதீச்சரத்தான்
அணிந்து அணிந்து
அழகு பார்க்க
இத்தனை ஆயிரம்
எலும்புக்கூடுகள்?

என் தேசம் எரிந்து எரிந்து
கருகிச் சாம்பலாக
எந்தப் பாதகி திருகி எறிந்தாள்
இடது முலை?
எரியும் நம் தேசத்தில்
இன்னும் இன்னும் - எண்ணையூற்றி
எண்ணையூற்றி ஊதி விடுவது யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரின் பகைப்புலம் அறியாது
போர்ப் பரணி பாடும் பாட்டுக்காரர்கள்
எவரோ - அவரே ஈழம் இன்னமும்
எரிந்து கொண்டு இருக்க
முதற்காரணி என்பேன் நான்.

போரின் பகைப்புலம் அறியாது
பரணிபாடும் பாட்டுக்காரர்களே
குழந்தையின் மரணத்தை நீங்கள்
குதூகலித்து கொண்டாடுகின்றீர்களா?
ரத்தத்தையும் கண்ணீரையும்
ருசி தட்டிச் சுவைக்கின்றீர்களா?
ஒப்பாரி ஓசைக்கு மத்தியிலும்
உங்களுக்குத் தூக்கம் சொக்குமா?

ஆம் எனில் எழுதுங்கள்.
மனிதம் நசிய நசிய
குழந்தையின் இரத்தத்தை
பேனாவயிற்றில் நிரப்பி
எஞ்சிய மானுடம்
மரணிக்கும்வரை
எழுதியே அழியுங்கள்
தேசங்களை எல்லாம்.

மஞ்சள் நிற சீனர்
கருநீல ஆபிரிக்கர்
ரெண்டும் கெட்டான் தென்னமரிக்கர்
பொது நிற ஹிந்தியர் மற்றும் செவ்விந்தியர்
மொத்த மொழி இந் நாட்டில் முப்பத்தி எட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றை இனத்துடன்
ஒத்துப் போக முடியாது
ஓடி வந்த நம்மைச் சுற்றி
எத்தனை இனக்காரன்,
எத்தனை மொழிக்காரன்,
எத்தனை நிறக்காரன்.
ஆயினும் நாம் வாழ்கின்றோம், வாழ்வோம்.

எப்படி இது சாத்தியம்?
அந்நிய தேசத்தில் சாத்தியமாமெனில்
ஏன் நம் சொந்த தேசத்தில்
முடியாதிருக்கிறது?

87 இல்
நம் சகோதரிகளை
விரட்டி விரட்டி
கற்பழித்த ஹிந்தியன்
இன்று நம் அயல் வீட்டுக்காரன்.

துரத்தி துரத்தி
முலைகடித்த சீக்கியன்
இன்று நம் எதிர்வீட்டுக்காரன்.
எதிரி எனப்பட்டவன்
எதிர்க்க இருந்தும்
இன்று நாம் அவனை
புன்முறுவலுடன் சிநேகிக்கவில்லையா?
என்ன ஆயிற்று நம் கோபம்
என்ன ஆயிற்று நம் மானம்?
எங்கே போயிற்று
தமிழ் மறவர் வீரம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீரத்தின் அர்த்தம்**
**எனக்கின்னும் புரியவில்லை.**
புலனுக்கு தெரிவது எல்லாம் ரத்தம் ரத்தம்
யுத்தத்தில் ரத்தத்தைத் தவிர
மிச்சம் என்ன உண்டு களத்திலே?

இனச் சுத்தம் இனச் சுத்தம்
எனச் சொல்லி
சோனகரை எல்லாம்
ஒற்றை நாள் இடைவெளியில்
நாட்டை விட்டு நாம் விரட்டியடித்தோம்.

நாமென்ன நாசிகளுக்கா பிறந்தோம்?
நம் பூர்வீகம் என்ன ஜேர்மனியா?

தூக்கிச் செல்ல மனச் சுமையும்
ஐநூறு ரூபாயையும் மட்டுமே
அனுமதித்த நாம் ஏன் மறந்தோம்,
பாட்டன் முப்பாட்டன் பரம்பரையாய்
சோனகரே ஆயினும்
அவனும் தமிழன் என்பதை ஏன் மறந்தோம்?

காலத்தின் கட்டாயத்தை
இப்போது இங்கு பாருங்கள்
இனச் சுத்தம் பேசும் நம் பரம்பரையின்
பிள்ளைகள் இன்று
கறுப்பின ஆபிரிக்கருடன் சல்லாபிக்கும்
காலத்தின் கட்டாயத்தைப் பாருங்கள்!
கறுப்பருடன் சல்லாபித்து விட்டு
வெள்ளைத் தோல் அமெரிக்கருக்கு
பிள்ளை பெற்றுக் கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் தீர்ப்பை யார் மறுப்பார்!
காலப்பயணமேறி
பாண்டியர் காலம் போவோம்...
சிவந்து கிடக்கிறது மதுரை நகரம்.
ரத்தச் சாக்கடையில் நாறிக்கிடக்கிறது
தமிழர் தலைநகரம்.

ஐயாயிரம் சமணர்கள்...,
அதிலும் மேலான வைணவர்கள், பௌத்தர்கள்
கழுவில் ஏற்றிக் கொன்று குவிக்கிறான் பாண்டியன்.
மதச் சுத்தம் மதச் சுத்தம்
எனச் சொல்லி
மதம் கொண்டலைகிறான் பாண்டியன்.

அதற்கு அப்புறம் ஆனதென்ன?
தெலுங்கு நாயக்கர் வம்சம்
பாண்டியர் தேசத்து நாச்சியார் வயிற்றிலெல்லாம்
சூல் கொண்டதென்பதுதானே
சரித்திரம் சொல்லும் உண்மை.

மானுடம் தோற்கும் பொழுதொன்றில்
புனல் வாதம் நடக்கிறது.

சதியாலோ மதியாலோ
அல்லது மந்திரத்தாலோ
உண்மையிலேயே
சம்பந்தர் பாடிய தேவாரத்தால் தானோ என்னவோ
சம்பந்தர் ஜெயிக்க
தோற்றது சமணர்.
அறிந்த புராணம்தான் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புறம் நடந்த கொடுமை
ஏன் வராமல் போனது வெளிச்சத்திற்கு?
புனல் செய்த கொடுமையால்
தோற்ற சமணர் இருநூறுபேர்
அத்தனை பேரும் -
சமயக் குரவர் ஞானப்பால் உண்ட
எங்கள் திருஞான சம்பந்தரால்
கழுவில் ஏற்றி
கொல்லப்பட்ட கொடுமை
ஏன் வராமல் போனது வெளிச்சத்திற்கு?

சைவம் காக்க
சேக்கிழார் விட்ட பிழையா?
நம்பியாண்டார் நம்பி செய்த தவறா?
ராஜ ராஜ சோழன்தான் மறைத்தானா உண்மையை?
இல்லை கறையான்தான் அரித்ததா ஏட்டை?

போகட்டும் -
இவரில் எவர் அறிவார்
ஏகப்பட்ட மதத்தை உள்வாங்கி
சைவம் கலப்படமாகி
இன்று இந்து மதமாகி மருகி நிற்பதை
திருஞான சம்பந்தரோ இல்லை எவரோ
எவர் அறிவர்?

போர் ஓயும் பொழுதில்
முட்களும் மீனும் வரட்சியும் விளையும்
மன்னார் தேசத்தில்
வேத சாட்சி கோவில் சென்று பாருங்கள்...
எத்தனை ஆயிரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவக் குழந்தைகளின் ரத்தம்
உங்கள் சங்கிலியனின்
கொடுவாளில் படிந்தது என்று
உங்களுக்குப் பட்டியல் போட்டுச் சொல்லும்.
சைவமும் தமிழும்
கொலையும் கொடூரமும் தானா?
என்ன நம் சரித்திரம்
நரபலி கேட்கும் ரத்தக் காட்டேறியா?

பத்மாசூரன் கொடூரன்தான்
சிவன் நஞ்சுண்டு காத்த தேவரை எல்லாம்
அழித்தொழிக்கும் அசுரன்தான்
அவனை அழிக்க வேண்டியதும் அவசியமே ஆகட்டும்.

அசுரனை அழிக்க நாம்
ஆயுதம் அணிவித்து அனுப்பியது யாரை,
பச்சைப் பாலகன் பால முருகனை அல்லவா?

கொலைகளின் பின்னணியில்
அரசியல் சூத்திரம் உண்டு
பால முருகன்கள் அரசியல் அறிவார்களா?

தமிழ் காக்கும் களங்களில் எல்லாம்
ஏன் நாம் பாலகரை பயன்படுத்துகிறோம்?

பாலகனின் ரத்தத்தில்
தாகம் தணிக்கும் என் தமிழ் அன்னையே!
நீ தாய் என்பதில்
எனக்குச் சந்தேகம் தட்டிவிட்டது.
எந்தத் தாய் தன் பிள்ளையின் ரத்தத்தில்
தன்னை புனிதப்படுத்திக் கொள்கின்றாள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மடியை எந்தத்தாய்
குழந்தைகளின் கல்லறையாக்கிக் கொள்கின்றாள்?
மரணத்தை வீரம் என்று
எந்த அம்மாக்களும்
கொண்டாடிக் கொள்வதில்லை.

உயிர் மூச்சை நெரிக்கும்
போரின் பொத்திய கையுள் இருந்து
தப்பி வந்த நம்மையும்
போரின் பகைப்புலம் அறியாது
போர்ப் பரணி பாடும் பாட்டுக் காரர்களையும் தவிர
எந்த அம்மாவும்
தன் குழந்தையின் மரணத்தை
வீரம் என்று கொண்டாடிக் கொள்வதில்லை

இப்போதெல்லாம்
தமிழ் பேசும் பனிபடர் தேசமெங்கும்
புதுவகை நோய் ஒன்று பரவுகின்றது
யுத்தத்தை வெறுப்போரெல்லாம்
ஈழத்தின் விரோதி என்கின்ற
புது வகை நோய் ஒன்று
தமிழ் பேசும் பனி படர் தேசம் எங்கும் பரவுகிறது.

சமாதானத்துக்கான பாடல்களும்
யுத்த எதிர்ப்பு கவிதைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [illegible]

குருதியில் தோய்த்து
அழித்தொழிக்கப்படுவது எந்த ஊர் நியாயம்?
உங்களில் யாருக்கேனும்
ரத்தம் மீது பிரியமுண்டா?
கொலைகள் உங்களுக்கு சம்மதமா?
உங்களை மகிழ்விக்குமா குழந்தைகளின் மரணம்?

பாலமுருகன்கள் ஆயுதம் அணிந்து
அழித்து அழிவதில் உடன்பாடுண்டா?

இல்லையல்லவா
அப்படியாயின்
யுத்தத்தைத் தின்போம்!
யுத்தத்தைத் தின்போம்!!
கொடும் ரத்தத்தை சிந்தும்
இந்த யுத்தத்தைத் தின்போம்!!!

கெட்ட போரிடும் களத்தில் இருந்து
நசியும் மனிதத்தை காப்போம்!

குழந்தைகளின் மரணத்தில்
மகிழ்ந்திருப்போரை - இப் பூமியில் இல்லாது
துரத்தியடிப்போம்!

சிலுவைகள் தான் எங்களுக்கு
சிறகுகள் தந்தன
சிலுவைகள் கிளை உடைய
சிறகுகள் இப்போது சுமையாகிப் போயின...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கிகள் எப்போது துருப்பிடிப்பது,
நாம் எப்போது நம் தேசம் மீள்வது?

ஐயாயிரம் மைல்களுக்கப்பால்
சிவனே என்றிருக்கும் நயாகராவைப் பாடும்
சிகரங்களைத் தொட்ட
எங்கள் வைரமுத்து ஐயா(?) அவர்கள்
கூப்பிடு தூரத்தில்
அழுகை ஒலி கேட்பதைப்பற்றி
அலட்டிக் கொள்வதில்லை?

நயாகரா மீது இருக்கும் அக்கறை
அக்கரையில் இருக்கும்
ஈழத்தின் மீது ஏன் இல்லை?

போகட்டும்

வெல்லத்தானே வீரம்
கொல்வதற்கு இல்லை.
கவியரசு ஐயா!
நீங்கள் சொன்னதாகத் தான் சொல்கிறது
பாட்டுப் பெட்டி.

யுத்தம் ஒன்றைத் தவிர
வேறொன்றும் தெரியாதென்னும்
என் தேசம் நோக்கி
கொல்லாமல் வெல்வது எப்படி
என்றாவது சொல்லுங்கள்....

06906

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களையும் காதுகளையும்
திறந்தும் வைக்கத்தான் வேண்டும்.

பூக்களின் மீது இட்ட பனிமுட்டைகளை பார்க்கவும்
காற்றில் கூடணமாடி வரும் பறவைகளின் ஒலி
கேட்கவும் மட்டுமல்ல

மனிதர்களை பார்க்கக் கற்றுக் கொள்ளவும்
மனிதத்தின் குரல்களை கேட்டுப் பழகவும்-

கண்களையும் காதுகளையும்
திறந்தும் வைக்கத்தான் வேண்டும்.

செழியன்

அருவி வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org